அவர்கள் அதைச் செய்வதில்லை. அந்த ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதாக இருந்தால் அது அவர்களை இன்னும் விக்டிமைஸ் செய்வதாக இருக்கும்; மானேஜ்மென்டுக்கு ஊக்க மளிப்பதாக இருக்கும். ஆகையால் இது பற்றி பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண, மத்திய சர்க்கார் இன்கம்டாக்ஸ் டிபால்டர் களைப் பற்றிய விவரங்களை பத்திரிகைகளில் பப்ளிஷ் செய்து, பொது மக்கள் அறியச் செய்வதைப் போல இம்மாதிரி ஜீ. ஓ.க் களை வயலேட் செய்கின்ற மானேஜ்மென்ட் மீதும் பப்ளிக் ஒப்பினியன் கிரியேட் பண்ண அந்த மானேஜ்மென்ட் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகளில் வெளியிட அரசாங்கம் முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நாம் இப்போது இருக்கிற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, நாம் இடுகிற ஆணைகளை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றால் வேறு என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம். ஆனால், பள்ளிக் கூடம் அல்லது அந்த நிர்வாகம் தவறு செய்தால், அரசு ஆணையை மீறி நடந்தால் அந்த வட்டாரத்தில் இருக்கிற பொது மக்களுக்குத் தெரியும் வகையில் ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, இவ்வாறு அரசு உத்தரவு பிறப்பித்தும், ஆணை பிறப்பித்தும் அதை நிறை வேற்ற மறுக்கக் கூடிய தனியார் பள்ளிகளுக்கு அரசு வழங்கும் மானியத்தை நிறுத்துவதன் மூலம் அந்த உத்தரவை அவர்கள் நிறைவேற்றும் வாய்ப்பு நிச்சயமாக ஏற்படும்; ஆகையால் அந்த வகையில் உத்தரவை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா? என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதைத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். இதிலே வரும் சிரமம் என்னவென்று சொன்னால் மற்ற ஆசிரியர் களுக்கு சம்பளம் கொடுப்பது நின்றுவிடும். நாம் தருகிற கிரான்ட் பெரும்பாலும் ஆசிரியர்களுக்கு சம்பளம் தருவதற்குத் தான். ஆகவே, நாம் கிரான்ட் நிறுத்தினால் அது மற்ற ஆசிரியர் களுக்கு சம்பளம் தராமல் நிறுத்துவதைப் போல் ஆகிவிடுகிறது. இதுதான் இதிலே இருக்கும் சங்கடம்.

உடற்கல்வி பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்கள்.

*வினா எண் 590—செல்வி பி. விசயலட்சுமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1982 மார்ச் 31]

இடைநிலை (Secondary Grade) ஆசிரியராக பணியாற்று பவர்கள் உடற் கல்வி பயிற்சி பெற்றிருந்தால் அத்தகையவர்கள் உடற் கல்வி ஆசிரியராக நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி உடற்கல்வி ஆசிரியர்கள் நிலை I மற்றும் நிலை II-ல் உள்ள வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒரே ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த சம்பள விகிதமும் இடைநிலை ஆசிரியர்களின் சம்பள விகிதமும் தற்போது ஒரே மாதிரியானதால் இடைநிலை ஆசிரியர் எவரும் உடற் பயிற்சி ஆசிரியராக நியமனம் பெற, சாதாரணமாக விரும்ப மாட்டார்கள்.

இடைநிலை ஆசிரியர்கள் பி.ஏ., பட்டமும், பி.பி.எட். பட்டமும் பெற்றிருந்தால் அவர்கள் உடற்கல்வி இயக்குநராக உயர்நிலைப்பள்ளிகளில் நியமனம் பெற விதிகள் இடமளிக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால், செகன்டரி கிரேடு டீச்சர்ஸ்ஸை காலியிருக்கும் இடங்களில் நிய மனம் செய்யாமல் இருப்பதாகத் தெரிகிறது. கர்நாடக மாநிலத்தில் கொடுத்த சர்டிபிகேட்டில் பிரச்னை என்றால், தமிழ் நாட்டில் பெற்ற சர்ட்டிபிகேட் ஹோல்டர்ஸ்ஸை காலியிடங் களில் நியமனம் செய்யாமல் இருப்பது சரியா ? ஆகவே, தமிழ் நாட்டில் பெற்ற சர்ட்டிபிகேட் ஹோல்டர்களை காலியிடங்களில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலை வர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத துணைக் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். அதைப் பற்றித் தனியாகக் கேட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதத்தில் வேறுபாடு இருப்பதாகச் சொல்லி அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் கொடுக்கலாம்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்